ஆரண்டாம வருடபரீட்சை (பொருளியல்) – 2018/2019

முதலாம் அரையாண்டு பருவமுடிவு

**ECN 2116 – இடைநிலை நுண்பாகப் பொருளியல்**

நேரம்: இரண்டு (02) மணித்தியாலங்கள் மட்டும்

எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கு விடையளிக்குக.

கணிப்பான்கள் பயன்படுத்தப்படலாம்.

---

வினா 01

I. நுகர்வோர் தெரிவுக் கோட்பாட்டின் பயன் தொடர்பான இரு எண்ணக்கருக்களையும் வரையறுக்குக.

(3 புள்ளிகள்)

II. சமபயன் வளையி மற்றும் அதன் பண்புகளை சுருக்கமாக வரையறுக்குக.

(7 புள்ளிகள்)

III. எல்லை பதிலீட்டு வீதம் (MRS) என்பதனை வரையறுத்து குறைந்து செல்லும் எல்லைப்பதிலீட்டு வீதத்திற்கான காரணத்தை விளக்குக.

(3 புள்ளிகள்)

IV. சமபயன் வளையி பகுப்பாய்வின் இரண்டு பிரதான பயன் தொழிற்பாடுகளும் யாவை? உதாரணங்களுடன் வரைபட ரீதியாக விளக்குக.

(7 புள்ளிகள்)

வினா 02

I. சமன் என்பவர் ($U_{xy}=X^{(1/5)}\ Y^{(4/5)}$) என்னும் பயன் தொழிற்பாட்டினை கொண்டுள்ளார். சமன் தனது 100 டொலர் வருமானத்தில் 1 டொலர் விலையுடைய X , Y ஆகிய இரு பொருட்களை கொள்வனவு செய்ய விருப்புகிறார்.

a. சமனுடைய வரவுசெலவுத்திட்ட வளையியைப் பெறுக.

(3 புள்ளிகள்)

b. பொருத்தமான லக்கிரான்சியன் பெருக்கியினை உருவாக்குக.

(3 புள்ளிகள்)

c. சமனின் பயன் உச்சப்படுத்தல் தீர்வினை வரைபட ரீதியாக காட்டுக.

(12 புள்ளிகள்)

d. சமனின உச்ச பயன் யாது?

(2 புள்ளிகள்)

(3 புள்ளிகள்)

II. நீண்ட காலத்தில் நிறைபோட்டி சந்தையில் அசாதாரண இலாபங்கள் நிலவுமா? வரைபடங்களை பயன்படுத்தி விளக்குக.

(5 புள்ளிகள்)

III. ABC என்னும் நிறைபோட்டி நிறுவனம் பின்வரும் மொத்த செலவு தொழிற்பாட்டினை கொண்டுள்ளது: ($TC=100+Q+Q^2$). ABC நிறுவனம் முறையே சந்தை கேள்வி ($P=1000-2Q$) மற்றும் நிரம்பல் ($P=100+Q$) சமன்பாடுகளை கொண்டுள்ளது.

a. சமநிலை விலை மற்றும் தொகையினை கணிப்பிடுக.

(3 புள்ளிகள்)

b. இச் சந்தை சமநிலையில் நிறுவனத்தின் இலாபத்தை உச்சப்படுத்தும் உற்பத்தி மட்டம் யாது?

(7 புள்ளிகள்)

c. இச்சந்தையில் நீண்ட காலத்தில் என்ன நடைபெறும் என்று எதிர்ப்பார்ப்பீர்?

(2 புள்ளிகள்)

**வினா 04**

I. தனியுரிமைச் சந்தை என்றால் என்ன? அதன் பண்புகளை பயன்படுத்தி விளக்குக.

(3 புள்ளிகள்)

II. நீண்ட காலத்தில் தனியுரிமை சந்தையில் அசாதாரண இலாபங்கள் நிலவுமா? வரைபடங்களை பயன்படுத்தி விளக்குக.

(5 புள்ளிகள்)

III. XYZ என்பது ஒரு தனியுரிமை நிறுவனமாகும். இது ($P=520-2Q$) என்னும் சந்தை கேள்வியினையும், ($TC=100Q+Q^2+50$) என்னும் மொத்த செலவினையும் கொண்டுள்ளது.

a. இத்தனியுரிமை நிறுவனத்தின் இலாப உச்சப்படுத்தும் விலை மற்றும் தொகையினை காண்க.

(7 புள்ளிகள்)

b. இத்தனியுரிமையின் சராசரி மொத்த செலவு யாது?

(3 புள்ளிகள்)

c. இலாப உச்சப்படுத்தல் தொகையில் ஒரு அலகிற்கான இலாபம் யாது?

(2 புள்ளிகள்)

... அதன் பண்புகளை பயன்படுத்தி விளக்குக.

(4 புள்ளிகள்)

II. சிலருரிமை நிறுவனம் முறிந்த கேள்வி கோட்டினை கொண்டிருப்பதேன்? வரைபடத்தை பயன்படுத்தி விளக்குக.

(6 புள்ளிகள்)

III. தனியுரிமை போட்டி சந்தையின் கீழ் இலாபம் உழைக்கும் மற்றும் இலாபம் உழைக்காத நிறுவனங்களின் தன்மையினை வரைபடங்களுடன் விளக்குக.

(6 புள்ளிகள்)

IV. சிலருரிமை மற்றும் தனியுரிமை போட்டிச்சந்தைகளின் கீழ் அரசின் வகிபாகம் யாது?

(4 புள்ளிகள்)

**வினா 06**

I. உற்பத்தி தொழிற்பாட்டினை வரையறுக்குக.

(2 புள்ளிகள்)

II. குறுங்காலத்தில் உற்பத்தியின் மூன்று கட்டங்களையும் வரைபடத்துடன் விளக்குக.

(5 புள்ளிகள்)

III. ஓர் எண்கணித உதாரணத்தைப் பயன்படுத்தி குறைந்து செல்லும் எல்லை பதிலீட்டு தொழிநுட்ப வீதத்தை (MRTS) விளக்குக.

(3 புள்ளிகள்)

IV. PQR என்னும் நிறுவனத்தின் உற்பத்தி சார்பு பின்வருமாறு தரப்பட்டுள்ளது. $Q=K^{(3/4)} L^{(1/4)}$, ( இங்கு K - மூலதனம், L – ஊழியம்) இந்நிறுவனம் ஓர் அலகு மூலதனத்தை 1 டொலருக்கும் ஓர் அலகு ஊழியத்தை 1 டொலருக்கும் கொள்வனவு செய்வதோடு உள்ளீட்டுக்காக 100 டொலர் செலவிடப்பட்டுள்ளது.

a. உத்தம வெளியீட்டு மட்டத்தின் போது பயன்படுத்தப்படும் K மற்றும் L இன் அளவுகளைக் காண்க.

(8 புள்ளிகள்)

b. உத்தம வெளியீட்டு மட்டம் யாது?

(2 புள்ளிகள்)

***** வினாப்பத்திர முடிவு *****